**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.**
முன்னிலை: திருமதி. வி. ஸ்ரீ வித்யா, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருமங்கலம்.
2018-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் நாள், வெள்ளிக்கிழமை
( பங்குனி மாதம் 23ம் நாள் ஹேவிளம்பி வருடம்)
அசல் வழக்கு எண்.288/2009
- - - -

கே.பெரியாழ்வார் ...... வாதி

/எதிர்/

1.கே.எல்.முகமது ரபி
2.பி.அசோக் ...... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 28.03.2018 அன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.பி.ஜி.அழகர்சாமி, அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.சக்திவேல் அவர்கள் முன்னிலையாகியும், வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அழைத்த போது ஆஜராகாமலும், அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இவ்வழக்கில் தாக்கலாகியுள்ள ஆவணங்களை சீராக ஆராய்ந்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கலான........

## தீர்ப்புரை

இவ்வழக்கானது தாவா சொத்தை அனுபவத்து வருவதில் பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ வாதியின் அனுபவத்திற்கு எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், செலவு தொகை கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிராதின் சுருக்கம் பின்வருமாறு :-

தனக்கன்குளம் கிராமம், பைமாஸ் நிர் 455-ல் கட்டுப்பட்ட நிலமும், பைமாஸ் நிர் 271-ல் கட்டுப்பட்ட நிலமும் ஆதியில் பட்டா நிர்.114-ல் கட்டுப்பட்டிருந்தன. ஷை நிலங்கள் ஷை தனக்கன்குளம் கிராமம், வி.பெரியகருப்பத்தேவர் மக்களுக்கு

பாத்தியப்பட்டிருந்தன. ஷை இரண்டு நிலங்களும் மதுரை, கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலைக்குத் தெற்கில் அமைந்துள்ளன. பைமாஸ் நிர்.455-ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 35 செண்டு நிலத்தில் கீழ்புறம் உள்ள 42 செண்டு நிலத்தை ஷை வி.பெரியகருப்பத்தேவரின் மக்களான கலுவத் தேவர் வகையறா 05.01.1963-ல் மதுரையைச் சேர்ந்த ஆர்.காளி செட்டியார் என்பவருக்குக் கிரையம் செய்தனர். இந்த விபரத்தை 2ம் பிரதிவாதி மு.வ.எண்.649/2008 வழக்கில் அவர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் பைமாஸ் நிர்271ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 20 செண்டு நிலத்தில் மேல்புறம் மேல்புறம் உள்ள 65 செண்டு நிலத்தை ஷை வி.பெரியகருப்பத் தேவர் மக்களான கலுவத்தேவர் வகையறா 23.06.1962-ல் சின்னச்சாமித் தேவர் என்பவருக்கு பதிவு கிரையப் பத்திரம் மூலம் கிரையம் செய்து ஷை சின்னச்சாமித்தேவர் அந்த நிலத்தை மேலே குறிப்பிட்ட ஆர்.காளிச் செட்டியாருக்கு 31.08.1962ல் கிரையம் செய்து விட்டார். மேலே குறிப்பிட்ட 65 செண்டு நிலம் கிழக்கிலும் அதனை ஒட்டி மேற்கே 42 செண்டு நிலமும் ஒரே தொகுப்பாக ஆர்.காளி செட்டியார் அவர்களுக்குக் கிரையம் பாத்தியப்பட்டு அவரே அனுபவித்து வந்தார். ஷை கால கட்டத்தில் திருநகர் பகுதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டதால் தனக்கன்குளத்தில் இருந்த நிலங்களில் பெரும்பாலான நிலங்கள் வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டன. இதற்கிடையில் ஆர்.காளி செட்டியார் அவர்கள் தான் கிரையம் பெற்ற 42, 65 செண்டு நிலங்களை ஒன்றாக இணைத்து அதனைப் பல வீட்டடி மனைகளாகப் பிரித்து சில நபர்களுக்கு கிரையம் செய்திருந்தார். அப்போது அந்த கிரையப்ப பத்திரங்களில் மொத்த விஸ்தீரணங்களையும் தவறாக குறிப்பிட்டிருந்தார். அதன் உரிமையாளர்கள் பெயர்களில் பட்டா வழங்கப்பட்டது. அதுசமயம் பைமாஸ் நிர்: 455 என்பது சர்வே எண்.203/1 ஆகவும், பைமாஸ்நிர்.271 என்பது சர்வே எண்.202/1 ஆகவும் மாற்றப்பட்டது.

பிற்காலத்தில் ஷை நிலங்கள் உட்பிரிவு செய்யப்பட்டதில் காளி செட்டியார் கிரையம் பெற்ற நிலங்கள் சர்வே எண்.202/1A -யிலும் 203/1B -யிலும் சேர்க்கப்பட்டன. ஷை இரு எண்களில் கட்டுப்பட்ட நிலங்களை ஆர்.காளி செட்டியார் பல வீட்டடி மனைகளாகப் பிரித்துக் கிரையம் செய்தனர். லே அவுட் வரைபடத்தின் படி பிளாட் எண்கள். 1 முதல் 4 அதனை அடுத்துள்ள 20 அடி அகல தென்வடல் பாதை, அடுத்து கிழக்கே உள்ள பிளாட் எண்.6, 7, 8, 9 ஆகியவற்றின் மேற்கு பகுதி சர்வே எண்.203/1பி-யிலும், மற்ற பகுதிகள் சர்வே எண்.202/1ஏ-யிலும் இருப்பது போலவும் தோற்றமளிக்கிறது.

இதற்கிடையில் தனக்கன்குளம் கிராமத்தைச் சேர்ந்த கே.கருத்தக்கண்ணன் என்பவர் 2ம் பிரதிவாதி மீது இந்நீதிமன்ற சர்வே எண்.203/1பி, 202/1எ-யில் கட்டுப்பட்ட 1 முதல் 4 பிளாட்டுகள் சம்பந்தமாக மு.வ.எண்.649/08 என்ற வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அதன்படி பார்த்தால் ஆர்.காளி செட்டியார் பிளாட் எண்.1, 2, 3, 4 மனைகளை 30.07.1975லும் 05.07.1975லும் தட்சிணாமூர்த்தி. பொன்னுச்சாமி ஆகியோருக்கு கிரையம் செய்திருப்பது தெளிவாகும்.

மோசடியான, தவறான பத்திரங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் தற்போது வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தினை அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கின்றனர். கடந்த 12.07.2009ம் தேதி பிரதிவாதிகள் இருவரும் தாவா சொத்திற்குள் தங்கள் அடியாட்கள் துணையுடன் ஆக்கிரமிப்பு செய்ய வந்தனர். எனவே இந்த வழக்கு.

3. 1ம் பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும், 2ம் பிரதிவாதி தரப்பில், வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அழைத்த போது ஆஜராகாமலும், அழைத்தும் ஆஜராகாத காரணத்தாலும் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

4. இவ்வழக்கின் வாதி தரப்பில் வாதி பெரியாழ்வார் வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் இல்லை.

5. ஆகவே வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணம் வா.சா.ஆ.1 முதல் 8 வரையான ஆவணங்கள் மற்றும் வா.சா.1 சாட்சியத்தின் படி வழக்கை தீர்மானிக்க வேண்டியுள்ளது.

6. வா.சா.1.தன்னுடைய சாட்சியத்தில் தனக்கன்குளம் கிராமம், பைமாஸ் நிர் 455-ல் கட்டுப்பட்ட நிலமும், பைமாஸ் நிர் 271-ல் கட்டுப்பட்ட நிலமும் ஆதியில் பட்டா நிர்.114-ல் கட்டுப்பட்டிருந்தன என்றும் ஷை நிலங்கள் ஷை தனக்கன்குளம் கிராமம், வி.பெரியகருப்பத்தேவர் மக்களுக்கு பாத்தியப்பட்டிருந்தன என்றும் ஷை இரண்டு நிலங்களும் மதுரை, கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலைக்குத் தெற்கில் அமைந்துள்ளன என்றும் பைமாஸ் நிர்.455-ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 35 செண்டு நிலத்தில் கீழ்புறம் உள்ள 42 செண்டு நிலத்தை ஷை வி.பெரியகருப்பத்தேவரின் மக்களான கலுவத் தேவர் வகையறா 05.01.1963-ல் மதுரையைச் சேர்ந்த ஆர்.காளி செட்டியார் என்பவருக்குக் கிரையம் செய்தனர் என்றும் இந்த விபரத்தை 2ம் பிரதிவாதி மு.வ.எண்.649/2008 வழக்கில் அவர் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

பைமாஸ் நிர்271ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 20 செண்டு நிலத்தில் மேல்புறம் மேல்புறம் உள்ள 65 செண்டு நிலத்தை ஷை வி.பெரியகருப்பத் தேவர் மக்களான கலுவத்தேவர் வகையறா 23.06.1962-ல் சின்னச்சாமித் தேவர் என்பவருக்கு பதிவு கிரையப் பத்திரம் மூலம் கிரையம் செய்து ஷை சின்னச்சாமித்தேவர் அந்த நிலத்தை மேலே குறிப்பிட்ட ஆர்.காளிச் செட்டியாருக்கு 31.08.1962ல் கிரையம் செய்து

விட்டார் என்றும் மேலே குறிப்பிட்ட 65 செண்டு நிலம் கிழக்கிலும் அதனை ஒட்டி மேற்கே 42 செண்டு நிலமும் ஒரே தொகுப்பாக ஆர்.காளி செட்டியார் அவர்களுக்குக் கிரையம் பாத்தியப்பட்டு அவரே அனுபவித்து வந்தார் என்றும் ஷை கால கட்டத்தில் திருநகர் பகுதி புதிதாக நிர்மாணிக்கப்பட்டதால் தனக்கன்குளத்தில் இருந்த நிலங்களில் பெரும்பாலான நிலங்கள் வீட்டடி மனைகளாக மாற்றப்பட்டன.

இதற்கிடையில் ஆர்.காளி செட்டியார் அவர்கள் தான் கிரையம் பெற்ற 42, 65 செண்டு நிலங்களை ஒன்றாக இணைத்து அதனைப் பல வீட்டடி மனைகளாகப் பிரித்து சில நபர்களுக்கு கிரையம் செய்திருந்தார் என்றும் அப்போது அந்த கிரையப்ப பத்திரங்களில் மொத்த விஸ்தீரணங்களையும் தவறாக குறிப்பிட்டிருந்தார் என்றும் அதன் உரிமையாளர்கள் பெயர்களில் பட்டா வழங்கப்பட்டது என்றும் அதுசமயம் பைமாஸ் நிர்:455 என்பது சர்வே எண்.203/1 ஆகவும், பைமாஸ்நிர்.271 என்பது சர்வே எண்.202/1 ஆகவும் மாற்றப்பட்டது.

பிற்காலத்தில் ஷை நிலங்கள் உட்பிரிவு செய்யப்பட்டதில் காளி செட்டியார் கிரையம் பெற்ற நிலங்கள் சர்வே எண்.202/1A-யிலும் 203/1B-யிலும் சேர்க்கப்பட்டன என்றும் ஷை இரு எண்களில் கட்டுப்பட்ட நிலங்களை ஆர்.காளி செட்டியார் பல வீட்டடி மனைகளாகப்பிரித்துக் கிரையம் செய்தனர் என்றும் லே அவுட் வரைபடத்தின் படி பிளாட் எண்கள்.1 முதல் 4 அதனை அடுத்துள்ள 20 அடி அகல தென்வடல் பாதை, அடுத்து கிழக்கே உள்ள பிளாட் எண்.6, 7, 8, 9 ஆகியவற்றின் மேற்கு பகுதி சர்வே எண்.203/1பி-யிலும், மற்ற பகுதிகள் சர்வே எண்.202/1ஏ-யிலும் இருப்பது போலவும் தோற்றமளிக்கிறது.

இதற்கிடையில் தனக்கன்குளம் கிராமத்தைச் சேர்ந்த கே.கருத்தக்கண்ணன் என்பவர் 2ம் பிரதிவாதி மீது இந்நீதிமன்ற சர்வே எண்.203/1பி, 202/1எ-யில் கட்டுப்பட்ட 1 முதல் 4 பிளாட்டுகள் சம்பந்தமாக மு.வ.எண்.649/08 என்ற வழக்கைத்

தாக்கல் செய்துள்ளார் என்றும் அதன்படி பார்த்தால் ஆர்.காளி செட்டியார் பிளாட் எண்.1, 2, 3, 4 மனைகளை 30.07.1975லும் 05.07.1975லும் தட்சிணாமூர்த்தி, பொன்னுச்சாமி ஆகியோருக்கு கிரையம் செய்திருப்பது தெளிவாகும் என்றும் மோசடியான, தவறான பத்திரங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் தற்போது வாதியின் அனுபவத்தில் உள்ள தாவா சொத்தினை அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கின்றனர். கடந்த 12.07.2009ம் தேதி பிரதிவாதிகள் இருவரும் தாவா சொத்திற்குள் தங்கள் அடியாட்கள் துணையுடன் ஆக்கிரமிப்பு செய்ய வந்தனர்.இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. வா.சா.1ன் வாயிலாக 31.08.1962ல் தேதிய காளிசெட்டியார் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 05.07.1975 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 31.03.1981ம் தேதிய கிரையப் பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 17.06.2008 பெரியாழ்வார் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 09.03.2009ம் தேதிய கே.சுல்தான் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகவும், அசல் வழக்கு 649/2008க்கான பிராது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், அசல் வழக்கு 649/2008க்கான அசோகன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும், மொகமது ரபீக் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆகவும், ஆணையாளர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் சாட்சியத்தையும் சான்றாவணங்களையும் பொய்ப்பிக்கும் வகையில் எவ்வித சாட்சிகளும், சான்றாவணங்களும் முன்னிடப்-படவில்லை.

9. ஆகவே வாதி கோரியபடி தாவா சொத்தை அனுபவத்து வருவதில் பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ வாதியின் அனுபவத்திற்கு எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிப்பது சட்டப்படியும் நியாயப்படியும் சரி என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, வாதியின் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. தாவா சொத்தை அனுபவத்து வருவதில் பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ வாதியின் அனுபவத்திற்கு எந்த விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2018 ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**வாதிகள் தரப்பு சாட்சி:-**

வா.சா.1. பெரியாழ்வார்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

வா.சா.ஆ.1. 31.08.1962ல் தேதிய காளிசெட்டியார் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.2. 05.07.1975 தேதியிட்ட கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.3. 31.03.1981ம் தேதிய கிரையப் பத்திரம்.

வா.சா.ஆ.4. 17.06.2008 பெரியாழ்வார் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரம்.

வா.சா.ஆ.5. 09.03.2009ம் தேதிய கே.சுல்தான் பெயரில் ஏற்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.6. அசல் வழக்கு 649/2008க்கான பிராது சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.7. அசல் வழக்கு 649/2008க்கான அசோகன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல்.

வா.சா.ஆ.8. மொகமது ரபீக் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல்.

நீதிமன்ற சான்றாவணம் :-

நீ.ம.சா.ஆ.1. ஆணையாளர் அறிக்கை.

நீ.ம.சா.ஆ.2. சர்வேயர் வரைபடம்.

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:** இல்லை.
**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-** இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**அசல் வழக்கு எண்.288/2009**
வரைவு/செவ்வை-**தீர்ப்புரை**
நாள்: 06.04.**2018.**